**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இராஜபாளையம்.**

அ.வ. எண். 26/2025 நாள்: 18.02.2026.

| | |
|---|---|
| **வா.சா.1** | **பி.சா.** |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜய் அமிர்தராஜ் | சமயம் | இந்து |
| த/பெ. | செல்வராஜ் | தொழில் | கோழிக்கடை வியாபாரம் |
| வயது | 44 | தாலுகா | இராஜபாளையம் |
| கிராமம் | சேத்தூர் | மாவட்டம் | விருதுநகர் |

சாட்சி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி, 1969–ம் ஆண்டு இந்திய பிரமாண சட்டம் பிரிவு 44–ன் ஏற்பாட்டின்படி உதவியாளர் திருமதி. K.மரகதஜோதி கிரேடு III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் உறுதி செய்யப்படுகிறது.

**சாட்சி இன்று ஆஜர் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1.நான் மகாலிங்கம் பிராய்லர்ஸ் என்ற பெயரில் கோழிக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 5 வருடமாக மேற்படி வியாபாரம் செய்து வருகிறேன். சேத்தூரில் வைத்து தொழில் செய்து வருகிறேன். எனது கடையில் வேலை செய்பவர்களுக்கு தினசரி கூலி கொடுத்து விடுவேன். நிரந்தரமாக யாரும் பணிக்கு எடுப்பதில்லை. தினசரி சம்பளம் மற்றும் வரவு செலவு எழுதி வைப்பேன் என்றால் சரிதான். வழக்கு பணம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு விவரம் எனக்கு தெரியும். பிரதிவாதி அருள்ஜோதி எனக்கு 2020 முதல் தெரியும். அவர் எனது கடையில் வேலைக்கு சேர்ந்தார் என்றால் 2021 இல் வேலை பார்த்து சிறிது நாட்களில் நின்றுவிட்டார். எனது கடையில் வேலை பார்க்கும் நபர்களுக்கு முன்பணம் கொடுத்து வைக்கும் பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. பிரதிவாதி அருள்ஜோதி எனக்கு 30 ஆயிரம் கொடுக்க வேண்டும். பணம் கொடுக்கும்போது எனது கடையில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். பிரதிவாதி வாரந்தோறும் 1500 செலுத்தி கடனை அடைத்து விட்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாங்கிய தொகையை வாரம் ரூ.1500 வீதம் செலுத்தி கடனை அடைத்துவிட்டார் என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2.எனது கடையில் 2021 முதல் 2024 வரை பணிபுரிந்தார் ஜூன் மாதம் 2024 வரை பணிபுரிந்தார். கடன் எப்போது வாங்கினார் என்றால் 06.04.2024 தேதி வாங்கினார். கடன் வாங்கிய சிறிது நாட்களில் வேலைக்கு வரவில்லை. பிரதிவாதி பணம் வாங்கிய பிறகு அடிக்கடி விடுமுறை எடுத்து வந்தார். அதற்கு முன்பு விடுமுறை எப்போதாவது தான் எடுப்பார். பிப்ரவரி 2024 வாக்கில் பிரதிவாதிக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது என்றும், அப்போது அவரை வீட்டில் சந்தித்து நான் வழக்கு கடன் உறுதி சீட்டு எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு கடன் தொகை எனது கடையில் வேலை

பார்த்து செலுத்திவிட்டார் என்றும், அதன் பிறகு நான் கடன் உறுதி சீட்டை பிரதிவாதி கேட்டும் திரும்ப கொடுக்க மறுத்து விட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் தெரிந்தும் பொய்யான சங்கதிகளை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து என் முன் செய்தார்.

ஒப்பம். திரு. A, ராமநாதன்,B.A.,B.L,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இராஜபாளையம்.